09.12.2024, OS.No.231/2022, D.W.1- ராமகிருஷ்ணன்

சாட்சி அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் என்அப்பாவிற்கு 04.09.1947 ம்தேதியிட்ட பாகபிரிவினை ஆவணம் மூலமும் மற்றும் 09.06.1966 ம்தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாயார் பெயர் முப்புடாதியம்மாள். என் அப்பா அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காமல் 26.01.1993 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயாரும் தாவா சொத்தில் அவருக்குரிய பாகத்தை பொறுத்தும் எந்த ஒரு ஏற்பாடும் செய்து வைக்காமல் கடந்த 16.03.2001 ம்தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் பெற்றோர்களுக்கு 1 முதல் 6 பிரதிவாதிகளும் மற்றும் முத்துலெட்சுமி என்பவர்களும் வாரிசுகள் என்றால் சரிதான். என் சகோதரி முத்துலெட்சுமி 02.04.2005 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு வாதிகள் இறந்துபோன என் சகோதரியின் வாரிசுகள் என்றால் சரிதான். என் சகோதரியின் கணவர் செல்லத்துரை கடந்த 24.10.2021 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனக்கு பூர்வீகம் மேலப்பாளையம், குறிச்சி ஆகும். என் சகோதரியின் கணவர் செல்லத்துரைக்கு குடியிருப்பானது திருநெல்வேலி ஜங்சன் சிஎன் கிராமத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி குறிச்சிக்கும், சிஎன் கிராமத்திற்கும் இடையே சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். தாவா சொத்து என்பது குடியிருப்பு வீடு, வயல் மற்றும் காலி மனை ஆகும். குறிச்சிக்கும், சிஎன் கிராமத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் தாவா வயல்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வயல்களுக்கு தண்ணீர் பாசம் பாளை கால்வாய் மூலம் என்றால் சரிதான். அது நஞ்சை வயல்கள் ஆகும். என் தகப்பனார் உயிரோடு இருக்கும் வரை மேற்படி வயல்களில் நேரடி விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் உயிரோடு இருக்கும்போதே என் சகோதரி முத்துலெட்சுமிக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் விவசாயம் மற்றும் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து வந்தார். அந்த வருமானத்தை வைத்து தான் என் சகோதரிக்கு என் தகப்பனார் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். திருமணம் செய்து கொடுக்கும்போது என் சகோதரி தாவா சொத்தில் அவருக்குரிய சொத்தை பொறுத்து பதிவு செய்த விடுதலை பத்திரம் எழுதி

கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்த பின்னர் நானும், என் சகோதரரும் வயல்களில் விவசாயம் செய்து வந்தோம். என் சகோதரி திருமணம் ஆன பின்னர் அவருடைய குடும்ப வாழ்க்கையை சிஎன் கிராமம், மீனாட்சிபுரத்தில் நடத்தி வந்தார். என் சகோதரியின் குழந்தைகளான வாதிகள் மீனாட்சிபுரத்தில் பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்தபின்னர் எங்கள் குடும்பத்தில் 4 திருமணங்கள் நடந்தது. என் தகப்பனாருக்கு மூத்த மருமகன் என் சகோதரி முத்துலெட்சுமியின் கணவர் செல்லத்துரை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் 4 திருமணங்களை மேற்படி செல்லத்துரை நடத்தி வைத்தார் என்றால் என் திருமணத்தை தவிர மற்ற 3 திருமணங்களை நடத்தி வைக்கவில்லை. என் அண்ணன் நடத்தி வைத்தார். என் சகோதரி இறக்கும் வரை எனக்கும், என் சகோதரிக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது. சுமூக உறவு இருந்தது. என் அப்பா, அம்மா இறந்தபின்னர் என்னுடைய மற்றும் என்னுடைய சகோதர, சகோதரிகள் பெயருக்கு ஆதரவாக முத்துலெட்சுமி விடுதலை ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் சகோதரி முத்துலெட்சுமி இறக்கும் வரை எங்கள் குடும்ப அனைத்து விஷேசங்களிலும், அவர் குடும்பத்துடன் கலந்து கொண்டார் என்றால் சரிதான். என் சகோதரி இறந்தபின்னர் வாதிகள் அனைவரும் எங்கள் குடும்ப விஷேசங்களில் கலந்து கொள்வார்கள் என்றால் சரிதான். என் சகோதரி இறந்தபின்னர் தாய்மாமன் என்ற முறையில் நானும், என் சகோதரர்களும் சகோதரி குடும்பத்திற்கு அனைத்து சீர்சிராட்டுகளும் செய்தோம் என்றால் சரிதான். தற்போது வாதிகளுக்கும், எங்களுக்கும் பேச்சு வார்த்தை உண்டா என்றால் அவர்கள் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு சென்னை சென்றதில் இருந்து பேச்சு வார்த்தை கிடையாது. செல்லத்துரையின் சகோதரி நீலகண்டன் என்பவரை எனக்கு தெரியும். அவருடைய குடியிருப்பு மீனாட்சிபுரம் ஆகும். வாதிகள் சென்னை சென்ற பின்பு திருநெல்வேலியில் நடைபெறும் அனைத்து நல்லது, கெட்டது காரியங்களில் கலந்து கொள்வார்கள் என்றால் சரியல்ல. என்  தாயார் இறந்ததற்கு கூட வரவில்லை. எங்களுக்கும், வாதிகளுக்கும் இடையே தாவா சொத்து சம்பந்தமான பிரச்சனை செப்டம்பர் 2021 மாதத்தில் ஆரம்பித்தது என்றால் சரிதான். வாதிகள் மற்றும் அவருடைய தகப்பனார் தாவா சொத்தில் 1/7 பங்கை பிரித்து கேட்டார்கள் என்றால் இல்லை. முதலில்

நோட்டீஸ் தான் வந்தது. அந்த நோட்டீஸ்க்கு பதில் அனுப்பவில்லை. என் அப்பா இறந்தபின்னர் என் சகோதரிக்குரிய பாகத்தை கொடுக்க மறுக்கிறோம் என்றால் நாங்கள் மறுக்கவில்லை. மத்தியஸ்தர்கள் மூலம் பேசினோம். நாங்கள் முத்துலெட்சுமியிடம் சொத்தை பிரிக்க போகிறோம் வாருங்கள் என்று சொன்னதற்கு அதற்கு அவரும், அவரது கணவரும் எங்கள் அப்பா 80 பவுண் நகை போட்டுள்ளார் மற்றும் 2 லட்சம் ரொக்கம் கொடுத்து நிறைய செய்துள்ளார் என்றும், இன்னும் குடும்பத்தில் 3 திருமணங்கள் நடக்க உள்ளது என்றும், தனக்கு சொத்தில் பங்கு எதுவும் வேண்டாம் என்று கூறிவிட்டார். 15.03.1994 ல் இந்த விசயம் நடந்தது. வேண்டாம் என்று சொன்னதற்கு என் சகோதரி ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. நம்பி செய்தோம். மேற்படி விசயம் திருநெல்வேலி சந்திப்பு, மீனாட்சிபுரம், விகே ரோடு, கதவு எண்.56 ல் மதியம் சுமார் 3 மணி வாக்கில் நடந்தது. 15.03.1994 ம்தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தை கேரளா மாநிலம், பாறசாலா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம். அன்று மதியம் சுமார் 12, 1 மணி வாக்கில் கேரளாவில் பதிவு செய்தோம். திருநெல்வேலியில் இருந்து கேரளாவில் உள்ள பாறசாலா சுமார் 140 கிமீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யும்தேதியில் கேரளா மாநிலம், பாறசாலா சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்து மேலப்பாளையம் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் இருக்கிறது. முத்திரை கட்டணம் குறைவாக இருக்கும் என்பதால் கேரளாவில் பதிவு செய்தோம். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் 1வது சொத்தாக காட்டப்பட்டுள்ள பாறசாலா பகுதியில் உள்ள சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான். அங்கு பத்திரம் பதிவதற்கு ஒரு சொத்து வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக ஒரு சொத்தை வாங்கினோம். பாறசாலா பகுதியில் சொத்தை கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் என் பெயரில் கிடையாது என்றால் சரிதான். அதன்பிறகு அந்த பத்திரத்தை மேலபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மீண்டும் பதிவு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 15.03.1994 ம்தேதி பாறசாலா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய பபட்ட பாகபிரிவினை பத்திரமானது மேலபாளையம் சார்பதிவளார் அலுவலகத்தில் வில்லங்கத்தில் வராது என்றால்

சரிதான். பாறசாலாவில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் குறைவு முத்திரை கட்டணத்தை மேலபாளையம் சார்பதிவாளர் அலுவகத்தில் 07.01.2021ல் கட்டினோம் என்றால் சரிதான். 15.03.1994ம்தேதியிட்ட பாகபிரிவினை ஆவணம் ஆனது என் தாயாரும் மற்றும் 6 பிரதிவாதிகளும் சேர்ந்து எழுதி கொண்டதாகும். 15.03.1994ம்தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் என் சகோதரியை சேர்த்து எழுததாதற்கு காரணம் என்ன என்றால் தனக்கு பங்கு வேண்டாம் என்றும், இன்னும் 3 கல்யாணம் உள்ளது. நன்றாக செய்யுங்கள் என்று சொன்னார். என் சகோதரி எந்த காலத்திலும் அவ்வாறு சொல்லவில்லை என்றும், 15.03.1994ம்தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் பற்றி அவருக்கு இறக்கும் வரையிலும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 15.03.1994ம்தேதியிட்ட பாகவிரினை பத்திரத்தின் நகலை என் சகோதரி இறப்பதற்கு முன்பு நானே கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுத்தற்கு அத்தாட்சி எழுதி வாங்கவில்லை. 15.03.1994ம்தேதி பாகபிரிவினை பத்திரத்திற்கு பின்னர் உடனடியாக அந்த ஆவணத்தின் படி அவர் அவர் பெயருக்கு பட்டா மாற்றம் மற்றும் சொத்து வரி மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா பெயரில் இருந்த பட்டா மற்றும் சொத்து வரி ரசீதுகள் தற்போது இருந்து சுமார் 3 வருடத்திற்கு முன்னர் மாற்றப்பட்டது. தாவா நஞ்சை பகுதியில் கடந்த சுமார் 15 வருடங்களாக அதை சுற்றி கட்டிடங்கள் கொஞ்சம், கொஞ்சமாக வர ஆரம்பித்தது என்றால் சரிதான். எங்கள் சொத்தில் கட்டிடம் கட்டவில்லை. கடந்த 15 வருடங்கள் கட்டிடங்கள் வரவர விவசாயத்திற்கு தண்ணீர் வரும் பகுதிகள் கொஞ்ச கொஞ்சமாக அடைக்கப்பட்டு விவசாய நிலங்கள் குறைத்துவிட்டது என்றால் நாங்கள் விவசாயம் செய்து தான் வந்தோம். நாங்கள் கட்டு குத்தகைக்கு விடவில்லை. நேரடியாக விவசாயம் செய்தோம். என் சகோதரியின் கணவர் செல்லத்துரைக்கு தாவா வயல் பக்கம் வேறு நிலங்கள் கிடையாது. என் சகோதரியிடம் தாவா சொத்தில் அவருக்கு பாகம் கிடையாது என்றும், நாங்கள் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேன். தாவா சொத்தில் சில சொத்துக்களை விற்பனை செய்த ஆவணங்களில் என் சகோதரியோ அல்லது அவர் கணவரோ வாதிகளோ சாட்சி கையெழுத்து செய்தது கிடையாது. நாங்கள் விற்க வேண்டும் என்று சொல்லும்போது அவர் விற்று கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். 2001ம் ஆண்டு வாக்கில்

முதலில் விற்பனை நடந்தது. விற்பனை நடந்தது என்பதை காட்ட வில்லங்க சான்று தவிர ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை தனிப்பட்ட முறையில் நாங்கள் அனுபவித்து வருவதாக எங்கள் சகோதரியிடம் எந்த காலத்திலும் சொன்னது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்யும்போது என் சகோதரிக்கு சொன்னது கிடையாது என்றால் சரியல்ல. என் சகோதரிக்கு தாவா சொத்தில் 1/7 பாகம் பாத்தியப்பட்டு அவர் இறக்கும் வரையில் எங்களுடன் கூட்டாக அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் சகோதரி இறந்தபின்னர் அவரது வாரிசுகளான வாதிகளும் மற்றும் நாங்களும் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 15.03.1994 ம்தேதியிட்ட பாகபிரிவினை பத்திரமானது வாதிகளின் தாயாரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்குரிய பாகத்தை கொடுக்காமல் இருப்பதற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றும், வாதிகளுக்கு பிராதில் கோரியுள்ள பாகம் கிடைக்கதக்கது இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.